முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 395/2022

தேதி : 31-07-2025

(பி.வா.சா.1) – திரு.வேலுச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 2ம் வகுப்பு. தமிழ் நன்றாக படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். எதிருரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தினை படித்து பார்த்துதான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை தவிர எனக்கு வேறு சொத்துக்கள் எவ்வளவு உள்ளது என்றால் வழக்கு சொத்தை தவிர்த்து 1.5 ஏக்கர் உள்ளது. வாதியிடம் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்திற்கு பின்னர் 2.3/4 ஆண்டுக்கு பின்னர்தான் எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு மோகன் சங்கர் என்பவர் மூலம் பதில் அனுப்பினேன் என்றால் சரிதான். சாட்சியிடம் அறிவிப்பு காண்பிக்கப்பட்டு அந்த அறிவிப்பு தான் நான் அனுப்பிய அறிவிப்பு என்று ஒப்புக்கொண்டார். அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் (கடைசியாக போடப்பட்ட ஒப்பந்தம்) நான் கையெழுத்து போட்டபின்னர்தான் வாதி கையெழுத்து போட்டார் என்றால் சரிதான், வட்டிக்காக தான் போட்டேன்.

2. அந்த ஆவணத்தில் உள்ள அனைத்து முதல் கையெழுத்துக்கள் என்னுடையது என்றும், 2வது கையெழுத்து வாதியின் கையெழுத்து என்றால் சரிதான். அசல் பத்திரம் என்வசம் உள்ளது என்றால் இல்லை, என் மனைவி வசம் உள்ளது. நாங்கள் இருவரும் ஒன்றாக இல்லை. மேற்படி ஒப்பந்தம் போட்டபின்னர் பலமுறை என் மனைவியிடம் வழக்கு சொத்தின் அசல் பாக பத்திரத்தை அவர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனக்கும் என் மனைவிக்கு கருத்து வேறுபாடு என்றால் சரிதான். அந்த பத்திரத்தை என் மனைவி கொடுத்தால் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை முடிந்துவிடும் என்றால் சரிதான். வாதியிடம் ஏற்கனவே ஓர் ஒப்பந்தம் போட்டேன் என்றால் சரிதான், அதற்கு முன்பு ஒரு ஒப்பந்தம் போட்டுள்ளேன். வாதியிடம்

எத்தனைமுறை ஒப்பந்தம் போட்டுள்ளேன் என்றால் 3 முறை. ஒவ்வொரு முறையும் என் மனைவி பத்திரம் கொடுக்காததால் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் ஆமாம், ஆனால் வாதி தான் அசல் பத்திரத்தை என் மனைவியிடம் வாங்குவார். எதற்காக 3 முறை ஒப்பந்தம் போடப்பட்டது என்று நீதிமன்றம் கேட்டபோது சாட்சி வட்டிக்காக வாதி ஒப்பந்தம் போடுவதாக சொல்கிறார்.

3. என் மனைவியிடம் நான் பத்திரத்தை கேட்டு என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்காலத்தில் அசல் பாக பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றாலும் என்னால் அந்த பத்திரத்தை கொடுக்க முடியாது என்றும், என் மனைவிதான் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். கடைசியாக ஒப்பந்தம் போட்ட காலத்தில் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ. 2 லட்சம் தான் வரும் என்றால் இல்லை, ரூ.30 லட்சத்திற்கு செல்லும். வழக்கு சொத்து ரூ.30 லட்சம் செல்லும் என்பதை காட்டக்கூடிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியும் நானும் 1 கிலோமீட்டர் தொலைவில்தான் குடியுள்ளோம் என்றால் இல்லை, 3 கி.மீ. எனக்கு முழுநேர தொழில் விவசாயம் தான் என்றால் சரிதான். வாதிக்கும் முழுநேர தொழில் விவசாயம் என்றால் தெரியாது. வாதி என் மனைவியிடம் அசல் பத்திரத்தை வாங்கி வருவார் என்ற விபரத்தை என்னுடைய பதில் அறிவிப்பிலோ, நிரூபணவாக்குமூலத்தில், எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், அப்படி வாதி என் மனைவியிடம் அசல் பத்திரத்தை வாங்கமாட்டார் என்றால் சரியல்ல. வட்டிக்கு ஆதரவாக தான் பணம் வாங்கினேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் உள்ளதா என்றால் வா.சா.ஆ.1 உள்ளது.

4. வா.சா.ஆ.1 தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். நான் வாதியிடம் வட்டி பணம் கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஆனால் வட்டிக்காக தேங்காய் வெட்டிக்கொள்வார். மேற்படி விபரத்தை என்னுடைய பதில் அறிவிப்பிலோ, நிரூபணவாக்குமூலத்தில், எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், அப்படி சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் 1வது சாட்சி கையெழுத்து போட்டவர் என் மச்சான் என்றால் சரிதான், அவர் பக்கத்து தோட்டத்துக்காரரும் கூட. 2வது சாட்சி எத்தனை ஆண்டாக

பழக்கம் என்றால் கிரையம் போடப்பட்ட காலத்திற்கு 2, 3 ஆண்டுக்கு முன்பிலிருந்து. வா.சா.ஆ.1 வட்டிக்காகதான் போடப்பட்டது என்றும், கிரையத்திற்காக அல்ல என்று சொல்லி ரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் மற்ற ஒப்பந்தங்கள் அனைத்தும் லட்சுமணசாமி என்பவர்மூலம் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவர் எனக்கு 10, 15 ஆண்டுகளாக பழக்கம் என்றால் சரிதான். 10.10.2022ம் தேதி வாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருப்பதாக சொல்வது பொய் என்று நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றும், எதனடிப்படையில் அவ்வாறு சொல்கிறேன் என்றால் நான் அங்கு போகவில்லை, அதனால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. நான் வட்டிக்காக ஒப்பந்தம் போட்டது என்று சொல்வது உண்மையல்ல என்றும், வழக்கு சொத்தின் அசல் ஆவணம் என் வசம் இல்லாததால் தான் உரிய நேரத்தில் நான் கிரையம் செய்யவரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பிறப்பித்தகாலத்தில் அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தின் மதிப்புதான் உண்மையான மதிப்பு என்றும், நான் சொல்வதுபோல் ரூ.30 லட்சம் என்று சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் சொல்கின்ற மீத சொத்தும் வழக்கு சொத்திற்கு அருகிலுள்ளது என்றால் சரிதான், வேறு சொத்தும் தனியாக உள்ளது. வழக்கு சொத்தும் மற்றும் ஒட்டியுள்ள சொத்தையும் நான்தான் விவசாயம் செய்கிறேன் என்றால் சரிதான். கிரையம் முன்பணம் பெற்றுக்கொண்டு கிரையம் எழுதி தரவேண்டிதான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்றும், நான் சொல்வதுபோல் வட்டிக்காக அல்ல என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.